முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர்
முருகப்பெருமான்எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக
எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சோபகிருது வருடம் வைகாசி மாதம் 07 திகதி முதல்
சோபகிருது வருடம் வைகாசி மாதம் 14 திகதி வரை
(21.05.2023 ஞாயிறு முதல் 28.05.2023 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. பாரப்பா அரங்கன் மகிமையை
   பண்பான ஞானப் படைகளை
   வரமாக உலகுக்குத் தந்து
   வழிநடத்துகின்ற நல் பெருமையை
2. பெருமைபட அரங்கன் கேட்க
   புகலுவேன் இந்தியா தமிழகத்தில்
   வருமுலகில் சோபகிருது விடைதிங்கள்
   வல்லமையான சப்தம திகதிமேல் முன்னான்கீர் திகதிவரை
3. வரைநடக்கும் வார நிகழ்வாக
   வருங்கால பலன்குறித்து ஆசி
   உரைப்பேன் அகத்திய மகரிஷியும்
   உண்மைபட ஆளுமை சக்திகள்
4. சக்திகள் மக்களுக்கானதொரு
   சாற்றுவேன் வாழ்வாதாரமான
   சக்தி குன்றா வண்ணம்காப்பு
   சாமானியர்க்கும் தந்தருள
5. அருளவே இறைபலமாகவே
   ஆற்றல் இந்தியா தமிழக ஆளுமைக்கு
   வரமாகக்கிட்டி சிறப்பு காணும்
   வகைசெய்யா வாரிச் சுருட்டி
6. சுருட்டியே வரிமேல் வரி போட்டு
   சுகமிலா மக்களை வதைத்து
   புரட்டியே கரையேற விடா
   பொதுநலம் காணா நிலை தொடர்ந்தால்

7. தொடர்ந்தால் அதிகார வர்க்கம்
தேவைகள் பைகள் நிறையலாம்
இடரென தேச வளர்ச்சியின்றி
இன்னும் ருணச் சுமைபெருகி
8. பெருகி எல்லாத் துறைகளும்
பெரிதான உபரி என்பதில்லா
குறுகி பற்றாக் குறையாகி
குளறுபடி மிகுதி காணக்கூடும்
9. கூடவே சகலத்துறைகளிலும்
குறைவிலா வேலைவாய்ப்பை
தடையற நிரப்பி காத்திட
தக்கபடி வளர்ச்சி நோக்கி
10. நோக்கியே தேசம் வளர்ந்து
நிலமதனில் இந்தியா தமிழகம்
ஆக்கமுடன் பிறநாடுகள் வியக்க
அனைத்திலும் மாற்றம் காணும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சோபகிருது வருடம் வைகாசி மாதம் 07ம் நாள் 21.05.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் வைகாசி மாதம் 14ம் நாள் 28.05.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

உத்தம மகா ஞானி, அவதார ஞானி ஆறுமுக அரங்க மகா தேசிகனாரின் மகிமைகளை பாருங்கள் அரங்கனின் ஞானப்படைகளை இந்த உலகிற்கு தந்து அந்த ஞானப்படைதனை தர்மநெறிக் கொள்கைவழி வழிநடத்தி செல்கின்ற அற்புதத்தை பாருங்கள் அந்த ஞானப்படைகளின் பெருமைகளை பாருங்கள் அத்தகு பெருமை மிக்க அரங்க மகான் அகத்திய மகரிஷி எம்மிடம் நாட்டின் எதிர்காலம் குறித்து கேட்க இந்தியா தமிழகத்தில் சோபகிருது வருடம் வைகாசி மாதம் 07ம் நாள் 21.05.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் வைகாசி மாதம் 14ம் நாள் 28.05.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

நாட்டை ஆளுகின்ற ஆளுமை சக்திகள் மக்களுக்கான வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் விதமாக அவர்களது துன்பம் நீங்கும் விதமாக மக்களை பாதுகாக்கும் விதமாக திட்டங்களை உருவாக்கி உண்மையுடன் செயல்பட்டால் கடவுளின் ஆசி அவர்களுக்கு கிடைத்து சிறப்பான ஆட்சியாக மாறி மக்கள் பயன்பெறுவார்கள்.

அவ்விதம் உண்மையுடன் செயல்படாமல் மக்களின் வரிப்பணத்தை வாரிச் சுருட்டி, மக்கள் மீது மேன்மேலும் வரிவிதிப்புகளை செய்து மக்களை வதைத்து அவர்களது முன்னேற்றத்தை தடைசெய்யும் விதமாக நடந்தும் பொதுநலம் கருதாமல் சுயநலமாக நடந்தும் வந்தால் அதிகார வர்க்கங்களின் தேவைகளை நிறைவேற்றி அவர்களது பைகளை நிரப்பி தன்னலமாக நடந்து வந்தால் நாட்டின் வளர்ச்சி குன்றும் நாட்டின் கடன்சுமை மேன்மேலும் அதிகமாகுமப்பா.

நாட்டின் கடன்சுமை அதிகமாகி, வளர்ச்சி குன்றி நாட்டின் எல்லா துறைகளும் பெரிதும் பாதிப்பு அடைவதோடு உபரி வருமானம் என்பதே இல்லாமல் போய் என்றும் பற்றாக் குறையாகவே உள்ள சூழல் உருவாகி நாட்டினில் குளறுபடிகள் அதிகமாகும்.

ஆகவே எல்லா துறைகளிலும் வேலை வாய்ப்புகளை பெருக்கி மக்களை காத்தும் தொழில் துறைகளை காத்து வளர்ச்சி பாதையில் செலுத்திட தேசமும் தகுந்த விதத்தில் வளர்ச்சியடைந்து பிற தேசமெல்லாம் வியக்குமாறு எல்லா வகையிலும் முன்னேற்றம் அடையும் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–